சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண். 63/2023

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள். வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாக்கியலட்சுமி | வயது | 49 |
| க/பெ. | யுவராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | | |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவரின் பாகத்தை கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். எனது மாமனார் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் லாரிக்கு பாடி கட்டும் ஒர்க் ஷாப் வைத்து இருந்தார். பாடி கட்டுவது மரம் சம்மந்தப்பட்டது என்றால் சரி தான். எனது மாமனார் பெயர் ரங்கசாமி. மாமியார் பெயர் துளசியம்மாள். எனது மாமனார் மற்றும் மாமியாருக்கு 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள் என்றால் சரி தான். 3 மகன்களும் பாடி பில்டிங் தொழில் தான் செய்து வந்தார்கள் என்றால் சரி தான். அதில் மூத்த மகன் அங்கப்பன் திருப்பூரில் தனியாக பாடி கட்டும் தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு அப்போது திருமணம் ஆகவில்லை. எனது மாமனாரின் முதல் மகன் அங்கப்பன் மற்றும் மூன்றாவது மகனான எனது கணவர் யுவராஜ் ஆகிய இருவரும் இறந்து விட்டார்கள் என்றால் சரி தான். அங்கப்பன் எனது மாமனார் இறப்பதற்கு முன்னரே இறந்து விட்டார் என்றால் சரி தான். அவர் 2002 ம் ஆண்டில் இறந்து விட்டார். எனது

மாமனார் 2011ம் ஆண்டில் இறந்து விட்டார். எனது கணவர் 10.06.2014 அன்று இறந்து விட்டார். எனது மாமியார் 2022ம் ஆண்டில் மே மாதம் இறந்து விட்டார். எனக்கு யுவராஜ் மூலமாக ஒரே ஒரு பெண் மகள் மட்டும் உள்ளார் என்றால் சரி தான். அவர் மன நலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரி தான். அவர் பிறந்ததில் இருந்தே மன நலம் பாதிக்கப்பட்டவர் என்றால் ஆமாம். ஆனால் அந்த விவரம் அவரது 3 வது வயதில் தான் எனக்கு தெரிய வந்தது. அவர் ரொம்ப பாதிக்கப்பட்டவர் இல்லை என்றும் ஓர் அளவுக்கு தான் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரி தான். அவருடைய தற்போதைய வயது 21 ஆகும். என்னுடைய பெற்றோர் ஊர் அவினாசி தாலுக்கா, கோதப்பாளையம் ஆகும். எனது கணவரின் மற்ற சகோதரிகளை பிரதிவாதிகளாக காட்டி உள்ளேன் என்றால் சரி தான். எனது மகள் 2 1/2 வயது இருக்கும் போது நான் எனது குழந்தையை எனது கணவருடன் விட்டு விட்டு எனது பெற்றோர் வீட்டுக்கு சென்று விட்டேன் என்றால் சரி அல்ல. குழந்தைக்கு 3 ½ வயது இருக்கும் போது எனக்கு உடல் நிலை சரியில்லை என எனது மாமனார் தான் எனது பெற்றோர் வீட்டிற்கு கொண்டு வந்து விட்டார். எனது உடல் நிலை சரியானதும் மீண்டும் எனது பெற்றோர்கள் எனது கணவரின் வீட்டில் என்னை விட்டு விட்டார்கள். அப்போது நான் எனது குழந்தையை எனது கணவர் வீட்டில் தான் விட்டு இருந்தேன் என்றால் சரி தான். ஆனால் ஒரு மாதத்தில் உடல் நிலை சரியானதும் எனது மாமனார் வீட்டிற்கு வந்து விட்டேன். நான் எனது கணவருடன் அடிக்கடி கோபித்து கொண்டு எனது அம்மா வீட்டிற்கு சென்று விடுவேன் என்றால் இல்லை. எனது கணவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டார் என்றால் சரி தான். அவர் எத்தனை வருடம் சிகிச்சை பெற்றார் என்றால் 2009 முதல் 2014 வரை சிகிச்சை பெற்றார். அவ்வாறு சிகிச்சை பெற்ற போது

1ம் பிரதிவாதி தான் எனது கணவருடன் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற உடன் செல்வார் என்றால் ஒரு மாதம் தான் உடன் சென்றார். அதன் பின்னர் வீட்டிற்குள் பிரச்சனை ஆனதால் அதன் பின்னர் எனது கணவர் ஆகவே மருத்துவமனைக்கு சென்று வந்தார். 5 வருடங்களுக்கு மேலாக 1ம் பிரதிவாதி தான் எனது கணவரை சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும் எனது கணவராக சிகிச்சைக்கு செல்லவில்லை என்றால் சரி அல்ல. எனது கணவரின் சிகிச்சைக்கு நான் உடன் செல்லவில்லை என்றால் எனது மகளுக்கு உடல் நிலை சரியில்லாததால் எனது மாமியார் உடன் சென்று வந்தார். எனது கணவருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனதற்கும் அவர் இறந்ததற்கு நானும் ஒரு காரணம் என்றால் சரி அல்ல. எனது மாமியாருக்கு இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து கை கால் வராமல் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரி தான். அவர் மருத்துவமனைக்கோ வெளியிலோ செல்லும் பொழுது சக்கர நாற்காலியில் தான் செல்வார் என்றால் சரி தான். அவர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அது போக டாக்டர் இளங்கோவன் என்பவரிடமும் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சக்கரை வியாதிக்காக ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ தான் அங்கு சென்று உள்ளார். மற்றப்படி எனது மாமியார் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றார். நான் எனது மாமியார் உடன் மருத்துவமனைக்கு சென்றது இல்லை என்றால் எனது மகளுக்கு உடல் நிலை சரியில்லாததால் நான் சென்றது இல்லை. எனது மாமியாரின் மூன்று மகள்களையும் வெளியூரில் தான் திருமணம் செய்து கொடுத்து உள்ளார் என்றால் சரி தான். எனது மாமியார் பெண் என்பதாலும்

அவருக்கு உடல் நிலை சரியில்லை என்பதாலும், நான் அவரை குளிப்பாட்டி, உணவு கொடுத்து, துணிகள் துவைத்து கொடுத்து பார்த்து கொண்டதாக என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்கு மூலத்திலோ கூறவில்லை என்றால் சரி அல்ல. நான் சாப்பாடு கொண்டு போனாலோ எனது மாமியாரிடம் பேச போனாலோ 1ம் பிரதிவாதி தட்டை வாங்கி வீசி விடுவார். கதவை சாத்தி விடுவார். எனது மாமியார் இறக்கும் வரை அவரை எங்களை பார்க்கவிடவில்லை. அவர் எனது மாமியாரை சாகும் வரை அடித்து கொடுமை படுத்தி வந்தார். நான் தான் எனது மாமியாரை கொடுமை படுத்தி வந்தேன் என்றும் அவரது இறப்பிற்கு நான் தான் காரணம் என்றால் சரி அல்ல. எனது மாமியார் தான் உலகம் என்று இருந்தேன். அவரையும் என்னிடம் பேசினால் 1ம் பிரதிவாதி அவரை அடித்து கொடுமைப்படுத்தி வந்தார். நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் நான் எனது மனநலம் பாதிக்கப்பட்ட மகள் மூலமாக மாமியாரின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தி அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை. எனது மாமியாரின் கடைசி காலத்தில் எனது மகள் மூலமாக எனது மாமியாரை படுக்கையில் இருந்து கீழே இழுத்து போட வைத்து உள்ளேன் என்றால் சரி அல்ல. 1ம் பிரதிவாதி தான் என்னையோ எனது மகளையோ பார்ப்பதற்கு எனது மாமியார் என்னை அழைத்தால் 1ம் பிரதிவாதி அவரை சேரோடு இழுத்து வந்து இந்தா பார் என சொல்லுவார். அப்போது எனது மாமியார் இரண்டு, மூன்று முறை அது போல இழுத்து வந்ததில் நிலை தடுமாறி கீழே விழுந்து உள்ளார். எனது நாத்தனார்கள் என்னிடம் எனது மாமியாருக்கு ஒரு வேலை உணவு கொடுக்குமாறு சொன்ன போது நான் இந்த வேலையெல்லாம் வைத்து கொள்ள கூடாது என்றும் நான் சாப்பாட்டில் விஷம்

வைத்து கொடுத்து விடுவேன் என்று கூறினேன் என்றால் சரி அல்ல. நான் செய்த கொடுமையால் எனது மாமியார் ஒரு வாரம் 1ம் பிரதிவாதி நடத்தி வந்த ஓர்க் ஷாப்பில் போய் குடியிருந்தார் என்றால் அவ்வாறு நடக்க வில்லை. என்னால் 1ம் பிரதிவாதிக்கு ஆபத்து ஏற்படும் என்று எனது மாமியார் பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனது மாமியார் அவரது கடைசி 5 வருட காலத்தில் கை, கால்கள் வராமல் இருந்தார். அவர் நேரத்திற்கு ஏற்ப மாற்றி மாற்றி பேசி தன் சுய நினைவு இல்லாமலும் இருந்தார். அவர் உயில் எழுதி வைத்திருக்க வாய்ப்பு இல்லை. நானும் கவனிக்கவில்லை என்பதாலும் எனது மாமியாரின் மகள்களும் கவனிக்கவில்லை என்பதாலும் தான் எனது மாமியார் பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து உயில் எழுதி வைத்து விட்டார் என்றால் சரி அல்ல. இந்த விசயங்களை என்னுடைய பிராதிலோ நிரூபண வாக்கு மூலத்திலோ கூறவில்லை என்றால் சரி தான். அதனால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. பேத்திகள் பாட்டியை பார்க்க வந்தாலோ அவர்களுடனும் நான் பிரச்சனை செய்து அடி தடி நடந்து காவல் நிலையம் வரை பிரச்சனை சென்று உள்ளது என்றால் அப்படி யாரும் என்னிடம் பிரச்சனை செய்தது இல்லை. நானும் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுத்தது இல்லை. எனது கணவருக்கு அவரது அப்பா ஜடையம் பாளையம் கிராமத்தில் ஒரு சொத்து வாங்கி கொடுத்துள்ளார் என்றால் அது எனது கணவராக சம்பாதித்தது. நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் எனது மாமனார் அவரது 3 மகன்களுக்கும் அருகருகில் சொத்து வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரி அல்ல. அந்த சொத்தை நான் யாருக்கு எவ்வளவு விலைக்கு விற்றேன் என்றால் அது எனது கணவர் தனிப்பட்ட முறையில் சம்பாதித்த

சொத்து என்பதால் நான் சுமார் 7 ½ லட்சத்திற்கு விற்று விட்டேன். விற்பனை செய்து இன்னும் 1 வருடம் ஆகவில்லை. எனது மாமியார் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி கொடுத்தது சரியானது என்பதால் தான் அவரது மகள்கள் இது வரை எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரி அல்ல. அந்த உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றும் அதனை பதிவு செய்த சார்பதிவாளரும் முறையாக விசாரணை செய்த பின்னர் தான் பதிவு செய்தார் என்றால் எனது மாமியார் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே இருந்தார். அவர் சுயமாக முடிவு எடுத்து கையெழுத்து போடும் நிலையில் இல்லை. அவர் உயில் பத்திரம் எழுதி கொடுக்கவும் இல்லை. கையெழுத்தும் போடவில்லை. எனது மாமியார் இறந்த பின்னர் குடும்ப பெரியவர்கள் பேசும் போது உயில் பற்றி சொன்னதையும் மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. அங்கப்பனின் மனைவியான 5ம் பிரதிவாதி வனஜா மற்றும் அவரது மகள்களின் தூண்டுதலின் பேரில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. எனது மாமியார் இறந்த பின்னர் அவர் எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு வந்து விட்டது என்றும் அதனால் பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தான் முழு உரிமையாளர் என்றால் சரி அல்ல. அவரை தவிர பிராது 2 வது தபசில் சொத்தில் வேறு யாருக்கும் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல. பிராது 1வது தபசில் சொத்தை பொறுத்து மட்டும் பாகம் பெற எனக்கு உரிமை உள்ளது என்றும் அதனை தருவதற்கு 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் சரி அல்ல. பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல. பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து வாங்கிய கடனையும்

எனது கணவர் தான் செலுத்தினார். அந்த சொத்தில் எங்களுக்கும் பாகம் உள்ளது. எனது கணவரே உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது அவரது சிகிச்சை செலவையும் எனது கணவர் வெளியில் வாங்கிய கடனையும் 1ம் பிரதிவாதி தான் செலுத்தினார் என்றால் சரி அல்ல. எனது கணவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவர் கடன் எதுவும் இல்லை. எனது கணவர் கோவை அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றார் என்றால் ஒரு மாதம் மட்டுமே அங்கு பார்த்தார். எனது கணவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போதுதான் இறந்தார் என்றால் சரி தான்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.